RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s245

OPEN ACCESS

# ஒப்பீட்டு நோக்கில் இந்தியப் பெண்ணியமும் ஐரோப்பிய பெண்ணியமும்

மா. ஜாஸ்மின் பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.ஜே.கே. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641105, தமிழ்நாடு, இந்தியா

# Indian Feminism and European Feminism from a Comparative Point of View

M. Jasmine Priya [a, *]

[a] Department of Tamil, AJK College of Arts and Science, Coimbatore-641105, Tamil Nadu, India

* Corresponding Author: jasminepriya@ajkcas.com

Received: 09-09-2022
Revised: 20-10-2022
Accepted: 27-11-2022
Published: 15-12-2022

Check for updates

## ABSTRACT

Feminism is found in many spheres of thought, ideas, principles, and policies in the political, economic, and social systems. It is unique that various cultural societies, including Europe, have been continuously developing over the ages through knowledge and feminist ideas. The growth of science in the twenty-first century has resulted in tremendous changes in society. There have been changes in the family structure, social structure, occupation, and dietary habits. It is the good and rational decisions that a woman makes in her life that will take her on the path of goodness and progress. Kannagi in Silappathikaram has experienced a lot more suffering than pleasure. Even in that situation, she has not changed from her position and is elevated as the Deity of Virtue. She does not regret that her husband, Kovalan, has separated and lives a normal life without changing her position. Through this study, it can be realized that a woman can improve her personality by being a disciplined woman and capable of decision-making. The human race is a dynamic environment. The life of the human race is based on every stage of life. In different environments, such as race, language, culture, habits, colour, food, and location, women are more likely to have physical and psychological difficulties than men. The suffering of women in society is obviously known to all. Women have to face difficulties at every stage of their development. The main difficulty that a woman faces in the living conditions of married women is patriarchy. In today's time, patriarchy is based on all kinds of caste, money, negative thoughts, family environment, etc. The main thing is that patriarchy is bureaucracy. There is a lot of patriarchy that empowers women and keeps them from coming out of their shells. The patriarchy of keeping women under house arrest, thinking that if they are left out, their value will diminish, or they will not be able to exercise power, is implicit and overt. Indian feminism and European feminism have been compared with those of patriarchy, which generally seeks to imprison a woman in the family system.

**Keywords:** Feminism, Europe, Power, Silappathikaram, Woman

## முன்னுரை

பெண்ணியம் - இயக்க ரீதியானது. இதனை தனக்குள் உணர்ந்தே குறுகிய காலத்தில் ஒரு பெண்ணின் மனதில் தனக்குரிய உரிமையினை உணர்ந்து, தன் இயக்கத்தில் அதன் வெளிப்பாட்டை அறியும் வகையில், ஒப்பீட்டு ஆய்வில் உட்படுத்தப்பட்ட இந்தப் பெண்ணியக் கருத்தாக்கத்தை கையாண்டுள்ளமையை இவ்வாய்வில் உணர்ந்துள்ளமைப் பதிவாக்கம் பெறுகின்றது. பெண்ணியம் என்பது குறித்த வேறுபட்ட வரையறைகள், விளக்கங்கள், புரிதல்கள் உள்ள சூழல் தற்போது நிலவுகின்றது. பெண்ணியங்கள் குறித்து உலக அளவில் அதிகம் பேசத் தொடங்கியுள்ளனர். அந்த

பரிசீலனைகளுக்குள் அதிகம் செல்லாமல், பெண்ணியம் சமூக மாற்றத்திற்கான அரசியல் இயக்கம் என்ற குறைந்தபட்ச வரையெல்லையை வகுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் இந்திய பெண்ணியத்திலும், ஐரோப்பிய பெண்ணியத்திலும் உள்ள புதிய வெளிச்சங்களைக் இக்கட்டுரையில் காணலாம். அது மட்டுமல்லாமல் பெண்ணிய அணுகுமுறைக்கென்று தனித்த குணநலன்கள் உள்ளனவா? பெண்ணிய நோக்கு மரபுவழிப்பட்ட கண்ணோட்டங்களுக்குச் சவால் விடுகிறதா? அல்லது விட்டுப்போனவற்றைச் சேர்க்கின்றதா? பெண்ணிய நோக்கு இதுகாறும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்தையும் மறு பரிசீலனைக்கு ஆட்படுத்துகிறதா?. இந்த மறுபரிசீலனை உண்மைக்கானத் தேடல் அல்லது தத்துவார்த்த சிந்தனை மட்டுமல்ல. எந்தவொரு ஒடுக்கப்பட்டக் குழுவின் கேள்விகளும் அரூபமான தளத்தில் இயங்க வாய்ப்பே இல்லை. முழுமையான உண்மையில் அதற்கு நம்பிக்கையும் இல்லை. அக்குழுவின் தேவை ஒடுக்கும் சக்திகளை மாற்றுவது, ஒடுக்குதலுக்கான காரணங்களை அறிந்து அவற்றைக் களைவது. இந்த வகையில் பெண்ணிய நோக்கு பழக்கப்பட்ட அதனாலேயே இயல்பானதாகக் கருதப்படுகிற அனைத்தையும் தலைகீழ் ஆக்குகின்றது. அதே நேரத்தில் இந்த அடக்கப்பட்ட வகைகளை மீறிய தளத்தில் பாலின (gender) அனுபவ அடிப்படையில் பெண்களைப் 'பெண்கள்| என்ற பால் வகைக்குள் தனித்துப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பெண் எழுத்தாளர்கள் பெண்கள் என்ற முறையில் பெண்மையவாதிகளாக இருக்கிறார்களா? எனப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. பெண்ணியக் கருத்தாடல்களை விமர்சன பூர்வமாக அணுகிப் பன்முகப்பட்ட புதிய பெண்ணியமொழியை இவர்களால் உருவாக்க முடிந்துள்ளதா? அல்லது நசிந்துப் போன மரபுகளை அப்படியே ஏற்கும் சோம்பல் நிறைத்த கருத்தாடல்களை மறுபிரசவங்கள் செய்கிறார்களா? என்னும் வினாக்களுக்கு விடை காண முற்பட்டுள்ளது இந்த ஆய்வு.

"மேலை நாட்டுப் பெண்ணிய சித்தாந்தங்களைக் கண்மூடித்தனமாக மேற்கொள்ளாமல் தமிழ் மண்ணுக்கும் தமிழர் வாழ்வியலுக்கும் பயனளிக்கும் வகையில் இயல்பான பெண்ணியக் கருத்தாக்கங்களின் துணைகொண்டு பெண்ணின் முழுமையான சுதந்திரத்தைப் பெறுவதை இந்தியப் பெண்ணியம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது" (Manivannan, 2008).

## இந்தியப் பெண்ணியம்

பெண்ணியம் என்பதற்கு ஜில் ஜான்ஸ்டன் என்ற அறிஞர் பெண்களின் விடுதலைக்காக, பெண்கள் நடத்தும் இயக்கம் (The Liberation of Women for Women) என்று விளக்கம் அளிக்கிறார். மற்றொரு அறிஞர், 'பெண்கள், சமூகத்தில் தங்களின் அந்தஸ்தையும், மதிப்பையும் பெறும் பொருட்டுப் பாடுபடும் இயக்கம் என்று பெண்ணியத்திற்கு விளக்கம் அளிக்கிறார்.

பெண்ணியவாதிகள் என்பவர்கள் யார்? மேலைநாட்டுப் பெண்ணியவாதிகள், பெண்ணியத்தின் அடிப்படையை உருவாக்கும் கோட்பாட்டாளர்களாகவும் (Theorists) செயல்பாட்டாளர்களாகவும் (activists) இனம் காணப்படுகின்றனர். இந்தியப் பெண்ணியவாதிகளோ பெண்களுக்குச் சமூகத்தில் ஓர் இடம்பெற்றுத் தர பாடுபடும் சீர்திருத்தவாதிகளாகவும், (Reformers) அவர்களை மரபுத்தளையிலிருந்து விடுவிக்கப் பாடுபடும் சமூக மறுமலர்ச்சியாளர்களாகவும் (Social revolutionist) காட்சியளிக்கின்றனர். எனவே, இந்தியப் பெண்ணியவாதிகளை இனம் கண்டுகொள்ள, இந்தியப் பெண்ணியத்தின் போக்கினை ஒட்டி, கீழ்க்கண்ட வரன்முறைகளைக் கைக்கொள்ளலாம்.

- ✓ பெண்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, அதற்காகப் பாடுபடுபவர்கள்
- ✓ பெண்களை, எல்லா நிலைகளிலும் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க முயல்பவர்கள்.
- ✓ பெண்களிடையே சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீக அடிப்படையிலான மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள்.
- ✓ இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் போராடிய பெண்மணிகளாக வரலாற்றில் முன் நிற்பவர்கள் டாக்டர் அன்னிபெசன்ட், திருமதி எம்.இ.கசின்ஸ், சரோஜினி நாயுடு, திருமதி ஹிராபாய் டாட்டா, செல்வி மிதன் டாட்டா, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ராஜகுமார், அம்ரித் கவுர், பேகம் ஹமிது அலி, திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாயா, பண்டித ரமாபாய், திருமதி விஜயலட்சுமி பண்டிட் போன்றவர்களைக் குறிப்பிடலாம். வரலாறு

இவர்களைப் பெண்ணியவாதிகளாக இனம் காட்டவில்லை. அரசியல்வாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும் இனம் காட்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டில் பெண்களின் மேம்பாட்டை வலியுறுத்தும் வகையிலும், அடிமைத் தளையிலிருந்து நீக்கும் எண்ணங்களைக் கொண்ட பெண்களிடையே சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீக அடிப்படையிலான மாற்றத்தை ஏற்படுத்தித் தரும் வகையிலும் இக்காலப் பெண்ணியம் அமைய வேண்டும்.

## மேற்கத்திய பெண்ணியம்

"இரு உலகப் போர்கள் நடந்தேறிய பிறகு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் தொழில் துறை மற்றும் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் மனித வாழ்வியலிலும் மாறுதல்களை ஏற்படுத்தின" (Manivannan, 2008). "சமூகம், பண்பாடு, வரலாறு, பொருளியல் ஆகிய தளங்களில் நிகழ்ந்த நவீனத்துவமும், பன்முகத்தன்மையும் பெண்ணிடம் முற்போக்குச் சிந்தனைகளை ஏற்படுத்தி மேற்கத்திய பெண்ணியத்திற்கு வித்திட்டன" (Manivannan, 2008).. ஆசிய நாடுகளில் குறிப்பாக ஐரோப்பியர்களின் குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்டுச் சுதந்திரம் பெற்றுள்ள கீழைத் தேசங்களில் மேற்கத்தியப் பெண்ணியத் தாக்கத்தினால், கிழக்கத்தியப் பெண்ணியம் தோற்றம் பெற்றது.

## பெண்ணியம் சில எளிய புரிதல்கள்

பெண்ணியத்தைப் பற்றி எம்.ஏ. சுசிலா அவர்களின் கருத்தை இங்கே பதிவுசெய்வது அனைவருக்கும் எளிய நடையில் புரிய வேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான் பெண்ணியக் கோட்பாடுகள் பல்வேறு பரிமாணங்களை எட்டியபடி உச்சத்தில் இருக்கும் இன்றைய காலகட்டத்திலும் கூட அது பற்றிய அடிப்படைப் புரிதல் கூட இல்லாதவர்களாகப் பலர் இருப்பதை அன்றாடச் சமூக நடப்பில் காணமுடிகின்றது. அப்படிப்பட்டவர்களிலும் பல்வேறு சாரார் உண்டு. ஒரு வகையினர் உண்மையிலேயே அது பற்றிய தெளிவு அற்றவர்களாய்ப் புரிந்துகொள்ள முயற்சியும், ஆசையும் கொள்பவர்கள். பிறிதொரு சாராரோ அது பற்றிப் புரிந்துகொள்ளும் தேட்டம் ஏதுவுமின்றிப் போகிற போக்கில் அதன் மீது கல்லெறிந்து விட்டுப் போகிறவர்கள். இன்னும் சிலர் ~பெண்ணியம் என்ற சொல்லையே ஏதோ தீட்டுப்பட்ட சொல் போல எண்ணிக் காத தூரம் ஓடிவிட்டுத் தொலைவிலிருந்து கொண்டு அதை எள்ளி நகையாடுபவர்கள்.

இன்றைய பின் நவீனத்துவச் சூழலில் பெண்ணியச் சிந்தனைகள் பலவகையான முன்னிறுத்தப்பட்டாலும் அவற்றின் தொடக்க நிலைத் தோற்றுவாய்க்கான அடிப்படை உண்மைகள் என்றும் மாறாதவை என்பதால் முதலில் ஒரு சில அடிப்படைகள் மட்டுமே தரப்படவிருக்கின்றன. தொடர்ந்து வரும் வாசக எதிர்வினை, பங்கேற்பு ஆகியவற்றுக்கேற்ப அனைத்துப் பெண்ணியச் செய்திகளும் ஆராய்ச்சிக்கு உட்படுகையில், வரிசை முறைப்படி, பின் நவீனத்துவப் பெண்ணியக் கருத்துக்களும் தவறாமல் இடம்பெறும்.

சமுதாய நலனில் அக்கறையும், சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட எந்த மனித உயிரின் இறுதி இலக்கும் மானுட விடுதலை நோக்கியதாகவே அமைதல் வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனாலும், காலம் காலமாக வருணம், சாதி, இனம் முதலிய மேலாதிக்க உணர்வுகளால் நசுக்கப்பட்டுத் தலைமுறை தலைமுறையாயத் தாழ்த்தப்பட்டவர்களாகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவுமே நடத்தப்பட்டு வரும் தலித்துகள் சாதி, வர்க்கம் என்ற வேறுபாடு எதுவுமின்றி, ஆணாதிக்க சமூக அமைப்பின்போது பால் அடையாளமாகவும், இரண்டாம் பாலினமாகவும் மட்டுமே எல்லைகள் குறுக்கப்பட்டுத் தனிமனிதத் தகுதி என்ற ஒன்றே மறுக்கப்பட்ட பெண்கள் ஆகிய இரு சாராரும் இன்னமும் கூடப் பல்வேறு தளைகளில் பிணைப்புண்டு கிடக்கும் இன்றைய சூழலில் அவர்களின் விடுதலைக்காகச் சிந்திப்பதும், அதற்காகக் குரல் கொடுப்பதும் ~மனித விடுதலை என்ற பேரிலக்கிற்கு அந்நியமானவை அல்ல என்பதால் தலித்தியம், பெண்ணியம் ஆகிய இரண்டும் எழுத்தாளர்களால் கவனம் பெறும் அடிக் கருத்துக்களாகிப் படைப்பிலக்கியங்களில் கோபக் குரல்களாகவும், கலகக் குரல்களாகவும் வெளிப்பாடு கொள்கின்றன.

"பழைய அழுக்குகள் - அது

உன் மூளையின் என் மூளையிலும்

ஏராளம்!

துடைத்ததெறிந்து விட்டுப் புறப்படுவோம் வா"

என்ற கவிஞர் சுபத்ராவின் அறைகூவலைப்போல காலம் காலமாகப் பெண் என்ற பிம்பத்தின் மீது நமக்குள் படிந்து போயிருக்கும் கருத்துருவாக்கங்கள் மூளைச் சலவைகள், முன் அனுமானங்கள் ஆகிய அனைத்தையும் துறந்துவிட்டு தேவையற்ற காழ்ப்புணர்வுகள், ஏளனம், பரிகாசம் ஆகிய போலியான முகமூடிகளையும் களைந்து வீசிவிட்டுப் பெண் என்பவள் மானுட இனத்தின் செம்பாதி அவளே என் தாய், தாரம், சகோதரி என்ற கண்ணோட்டத்தோடு பெண்ணியத்தை அணுகினால் மட்டுமே அதன் நியாயத்தைச் சரியான கோணத்தில் உள்வாங்கிக் கொள்ள இயலும்.

## ஆன்மீக பெண்ணியம்

ஆன்மீகம் என்னும் தெய்வீக உணர்வுக்கு முன்னர் இருபாலரும் சமம் என்ற கருத்தினை வலியுறுத்தி பெண்ணியத்திற்கு விழிப்புணர்வை ஊட்டியது ஆன்மீகப் பெண்ணியமாகும்.

## பெண்ணியக்கத்தில் வேனிலா ஸ்டாலின்

உலக வரலாற்றில் எஞ்ஞான்றும் தீராப் போராட்டமாகத் திகழ்வது இனப்போராட்டம். ஆடவர், பெண்டிர் என்ற பாகுபாட்டுச் சிக்கலும் இத்தகைய நிலைபேறு உடையதாகும். இச்சிக்கலைத் தீர்க்க வேண்டுமாயின் பெண்டிர் முனைப்பு கொள்ள வேண்டும். மகளிரே முனைந்தால் அன்றி மகளிர் முன்னேற்றம், உரிமை இவற்றைப் பெற இயலாது. இதனையே தந்தை பெரியார் தமது பெண்ணியக் கருத்தாகக் கூறுகிறார். (பெண் ஏன் அடிமை ஆனாள்). இந்த நோக்கில் பெண்ணினத்தின் உயர்வை உணர்த்த, உழைத்த பகுத்தறிவுப் பெண்பாற் புலவர் ஔவையார் ஆவார்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் மட்டுமன்றி இக்காலத்தில் வாழும் பெருமக்களும் இத்தகைய பெருமைக்கு உரியவர் ஆவர். எளிமைப் பண்பும், உண்மை உள்ளமும், வீர உணர்வும் உடையவராக பெண்கள் விளங்க வேண்டும்.

உயிரினங்களின் தொடர் மரபுச் சங்கிலியாக விளங்குவது பெண்ணினம். எனவே, பெண்ணினம் உலக இயக்கத்திற்கு முதற்பொருளாக விளங்குகிறது. கருவுயிர்த்தலால் முதற்பொருளாக மதிக்கப்பட வேண்டிய இவ்வினத்திற்கு உரிப்பொருளாக உரிமை வேட்டல் அமைந்துள்ளது. தமக்குரியவற்றையும் போராடிப் பெறவேண்டிய கட்டத்தில் பெண்டிர் வாழ்கின்ற இச்சூழ்நிலை தற்காலத்தில் வலுப்பெற்றுள்ளது. தொல்காப்பியரின் மொழிநூற் கொள்கைகளின் தொகுப்பைத் தொல்காப்பியம் என்று பெயரிட்டமை போன்று, பெண்டிர் நலக் கொள்கைகளின் தொகுப்பான பெண்டிர் உரிமை வேட்டலைப் பெண்ணியம் எனலாம்.

## பெண்ணியக்கக் கோட்பாடுகள்

மகளிர் உரிமைகளை உரிய நிலையில் பெற்று நிலைநிறுத்துவதே பெண்ணியக்கத்தின் குறிக்கோளாகும். கற்பு, காதல், திருமணம், விதவைகள் நிலைமை, மறுமணம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், சொத்து, ஆண்மைக்குப் பணிந்து தம் கருத்துக்களைக் காத்தல், செயலாக்கா நிலை எடுத்து கொள்ளப்பட்டது பல கோணங்களில் பெண்ணியக்கக் கோட்பாடுகளை வரையறுக்கலாம்.

## பெண்ணியக்கப் பணி

மக்கள் தொகுதியில் நிகர் பாதியினராகிய மகளிர், ஆடவர்க்கு இணையான அறிவும், அருமையும், பெருமையும், உரனும் பெற்றிருத்தலின் தகுதியும் இணையாகப் பெற்றவர் என்பதைச்

சமுதாய நடப்பில் பதியவைக்க வேண்டும் என்பது பெண்ணியக்கத்தினரின் தலையாய பணியாகும். பெண்கள் அனைத்து துறையிலும் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றனர். எனினும் கல்வி கலையறிவு அளிக்கவும், பொருளியல் திருமண உரிமை அளிக்கவும், கருத்து வெளிப்படுத்தவும் முழு உரிமைகள் அளிக்கப் பெற்றனரா என்பது பெரும் வினாவாகவே உள்ளது.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்களில் பெண்ணின் உரிமை தடை செய்யப்படவில்லை. பெண் கல்வி, கேள்விகளில் புலமை பெற்றிருந்ததை, "பெண் பிறவி இழிவுக்குரியது என்று யாரும் கருதவில்லை" "மணக்கொடை (வரதட்சணை) கொடுமை இல்லை"[6] "நல்லிற்பாவையன்ன நல்லோற் கணவன்" என்று பதிற்றுப்பத்திலும் "மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" என்று திருமுருகாற்றுப்படையிலும் (அடி-6) பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு பெண்ணிய தனித்துவத்தை அறிந்து சமுதாயத்தில் அங்கீகாரத்தை பெறலாம் என்பதும் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

## திருக்குறள்

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில்,

"மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"

என்றும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மையுண் டாகப் பெறின்"

என்றும் வள்ளுவம் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்று வலியுறுத்துவதை அறிந்து கொண்ட நாம் தனித்துவ பெண்ணிய அங்கீகாரம் பெறவேண்டும்.

## காப்பியம்

நீதி நூல்களிலிருந்து காப்பியங்களிலும் அறவழி வாழ்க்கை நடத்துதல், இல்லறத்தைப் பேணிக்காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் ஆகியன பெண்ணின் கடமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில, ஆண்கள் குடும்ப வளத்தைக் காக்கக் கூடிய நிலையில் கற்புடன் திகழும் பெண்களைத் தெய்வமாகக் கருதுகின்றனர். ஆனால் மூடப்பழக்கவழக்கங்களைச் சாடும் சித்தர்கள் பெண்களை வெறும் இன்பத்தைத் தரும் போகப் பொருளாகவும், பேய் என்றும் வேறுவிதமாகக் கூறுகின்றனர். பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் புராணக் காலத்தில் பெண்ணின் நிலை மேலும் தாழ்வுநிலை அடைந்துள்ளது. எனவே இதனை மீட்டுருவாக்க கதைகளாய் படைத்து பெண்ணின் ஆளுமையையும், திறன்களை உணர வைத்த செயலாற்றல் மிக்கவர்களாய் உருவாக்க வேண்டும் என்னும் எண்ணங்களை வடிவமைப்பு செய்ய வேண்டும்.

## பக்தி இலக்கியம்

பக்திக் காலத்தில், சமயங்களின் எழுச்சியால் சாதிக் கட்டுகளை மீறிப் பெண்கள் கோவில் வழிபாடு, விருந்தோம்பல், சமூகப் பணிகளில் கலந்து கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொண்டனர். அரச, பிராமண, வேளாளர் குலப்பெண்கள் சமயவாழ்வில் அதிகம் பங்கேற்றுள்ளனர்.

சிவபெருமானின் அம்சமாகத் திகழ்பவர் சுந்தரர். சங்கிலி நாச்சியார், பரவை நாச்சியார், மற்றும் சடங்கவியின் மகள் ஆகிய மூவருமே அவரை மணம் செய்யும் பொருட்டு அவதரித்தவர்கள். சங்கிலி

வளர்ந்தது முதல் சுந்தரரையே தன் கணவனாக அடைய பிரார்த்தித்து வருகிறாள். இருப்பினும் அவள் பரவையுடன் சுற்றுவதை விரும்பவில்லை. இதற்கிடையில் அவள் தந்தை தங்கள் காலத்திற்குள் தன் மகளுக்குத் திருமணம் புரிய விரும்புகிறார். இருப்பினும் பரவையை விடுத்து அவர் தனியே வந்தால் தான் தான் அவரை மணக்க இயலும் என்ற அவள் கோரிக்கையை ஏற்று இறுதியில் அவள் சம்மதத்தையும் பெறுகிறார். இதற்கிடையில் சடங்கவியின் மகள் தன் திருமணம் சுந்தரரால் நடந்தேறிய தடுத்தாட்கொள் நாடகத்தால் நிறைவேறாமல் போய்விட்டதைச் சூட்சுமமாகத் தெரிவித்து சங்கிலியின் திருமணத்திற்குத் தடை கூறுவதோடன்றி, அவ்விருவரும் பரவையினையும் தடுத்தாட்கொள்ளச் செல்கின்றனர். சைவ இலக்கியத்தில் இறைவனின் தம்பிரான் தோழராக காட்சிப்படுத்தும் சுந்தரரின் வாழ்வில் பெண்ணின் நிலைப்பாட்டை உணர்த்தும் வகையில் இக்கதையை உருவாக்கியுள்ளார். சங்கிலி, மற்றும் சடங்கவியின் மகள் ஆகியோர் இறைவனின் அவதார புருஷனாகிய சுந்தரரால், பரவையின் பொருட்டு உளவியல் வகைகளில் ஒன்றாக வஞ்சிக்கப்படுவதை அறிய முடிகிறது.

## நவீன இலக்கியம்

மேலை நாடுகளில் தோன்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் வரவால் அறிமுகம் செய்யப்பட்டன. இவற்றை இலக்கியங்கள் எடுத்துக்காட்ட முனைந்தபோதுதான் பெண் முன்னேற்றமும் முளைவிடத் தொடங்கியது.

தமிழில் முதன்முதலில் எழுந்த புதினமாக வேதநாயகம்பிள்ளையின் "பிரதாப முதலியர் சரித்திரம்" (1879), தொடர்ந்து வந்த மாதவையாவின் "பத்மாவதி சரித்திரம்" (1898) இரண்டும் பெண்கல்வி, விதவை மறுமணம் முதலியனவற்றைப் பேசுகின்றன.

"தமிழின் முதல் நாவலாசிரியராகத் திகழ்வதற்கு முனிசீப் வேதநாயம் பிள்ளையிடத்திருந்த தகைமைகள் பெண் விடுதலை இயக்கம், சன்மார்க்க நெறிப்பிரச்சாரம், சமூக சீர்திருத்தம் போன்ற துறைகளில் அவருக்கிருந்த ஈடுபாடு ஆகியவை வேதநாயகம் பிள்ளையின் பெண் விடுதலை உணர்வைத் தோற்றுவிக்கக் காரணிகளாக இருந்தன"[11] என்ற கா. சிவத்தம்பியின் கூற்றை இங்கே நினைவுபடுத்தலாம்.

பெண்ணுரிமை குறித்து நினைத்தவர்கள் மேல் கண்டனமும் ஏவிவிடப்பட்டது. பெண், உரிமை பெற்றால் குடும்ப - சமூக நிறுவனக் கட்டமைப்பு குலைந்துவிடும் என்கிற ஆண்களின் பயத்தை இது உணர்த்துவதோடு, பெண் ஆணின் நலனுக்காகப் படைக்கப்பட்டதற்குக் கற்பு காரணமாக அமைவதால், அவள் ஆணின் பாதுகாவலில் வாழ நிர்ப்பந்திக்கப்படுவது தேவையானதாகவும் கருதப்படுகிறது. கற்புக் கருத்தாக்கம் பற்றிக் கணேசலிங்கன் கூறுகிறார்.

"பெண்ணின் கற்பு மட்டும் கணவனால் வேண்டப்படுவதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. தனக்குப் பிறக்கும் குழந்தை தன் குழந்தை| என்ற உறுதியைக் கணவன் எதிர்பார்க்கிறான். தன் தனிச் சொத்தைத் தன் பிள்ளைக்கு வழங்க வேண்டும் என்ற நினைவே கணவனது மனதில் பதிந்திருப்பதாகும். சொத்துடைமைக் குடும்ப அமைப்பு கணவனின் ஆதிக்கத்தில் இருப்பதுவே பெண்ணை அடிமையாக்க வாய்ப்பளிக்கிறது"[12] கற்பு என்பது ஆண் ஆதிக்கத்தை உறுதிப்படுத்த எழுந்த மதிப்பீடு என அறிந்தக் கொள்ளலாம். இந்தக் கருத்தாக்கத்தை அதிதீவிரமாகப் பேசியவர்கள் பாரதியார், பெரியார், அம்பேத்கர் ஆகியோர் ஆவர். எனவே, பெண்ணின் தனித்துவத்தை உணர்ந்து சமுதாயத்தில் தன் ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும்.

## பெண்ணை இழிவுபடுத்தல்

ஆணாதிக்கம் உள்ள ஆண்கள் பெண்களை இல்லத்தில் அடைத்து வைத்து, துன்புறுத்தி வெளியுலகைக் காணவிடாமல் இழிவுப்படுத்துகின்றனர் (Kamali, 2005). ஆண்கள் உலகம் வேறு. வெளி உலகில் ஆண்களுக்கு ஆயிரம் சுதந்திரமான செயல்கள் காணப்படுகின்றன. நண்பர்களுடன் ஊர் சுற்றி எல்லாவிதமான மகிழ்ச்சியையும் அனுபவித்து விட்டு வீட்டிற்கு வருவார்கள். தாங்கள் வேலைச்

செய்யும் இடங்களில் தங்களுக்கென்று நட்பு வட்டாரத்தை உருவாக்கிக் கொண்டு நான் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற சுயநலத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் பெண்கள் குடும்பத்தையும், கணவனையும், குழந்தைகளையும், சொந்த பந்தங்களையும் கவனித்து குடும்பச் சுமையைத் தன் தோளில் சுமந்து எந்தவித மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியாமல் இச்சமுதாயத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். இவ்விதமாக பெண்களை வீட்டுச் சிறையில் அடைத்து வைத்து ஆண்கள் புற உலகில் அதிக செல்வாக்குடன் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

## பெண்ணிய நோக்கில் மீட்டுருவாக்க இலக்கியப்படைப்பு

மொழி பற்றி ரௌ பாத்தம் குறிப்பிடுவது இங்குக் கணக்கில் எடுக்கப்பட வேண்டியதாகிறது.

"மொழி, ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த

ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகும் - நாம் புழக்கத்தில்

இருக்கும் சொற்களை அப்படியே ஏற்கமுடியாது

அச்சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்பே

அவற்றை நாம் கையில் எடுக்க வேண்டும்"

இந்த அடிப்படையில், தமிழில் பெண்பால் எழுத்தாளர்கள் பயன்படுத்தும் மொழியைக் கொண்டு அவர்கள் வெளிப்படுத்தும் உலகியல் நோக்கை நாம் உணர முடியும்.

பெண்ணின் அனுபவங்களை மையப்படுத்தும்போது ஆண்நிலை அனுபவ வெளிப்பாடுகள் தலைகீழாகப் (invert) புரட்டப்படுகின்றன. அதன்மூலம் அரூபமான ஆண் மைய மதிப்பீடுகளில் உள்ள அரைகுறைத் தன்மைகளும் வக்கிரங்களும் வெளிப்படுகின்றன. மனித செயல்பாடுகளை மதிப்பிடும் தன்மையை (valuation) தலைகீழ் ஆக்கும் பகடி (arody) இதில் சாத்தியமாகிறது.

பெண்ணியம் என்பது ஆண்களை சாடுகின்ற தத்துவம் அல்ல, விலக்கும் தத்துவமுமல்ல (Lesbianism) தவிர, ஆண்களின் ஆதிக்கத்தை மாற்றுகிற பணியை மேற்கொண்டுள்ள பெண்ணியம், அதே நேரத்தில் அவர்களுக்குப் பழகிப்போன அதிகாரத் தொனி வந்துவிடக்கூடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண்-பெண் வகைப்பாடுகளை விடுத்து ஆணிய, பெண்ணிய பாலினக் கூறுகளை முதன்மைப்படுத்துவது அவசியமாகும். இதனடிப்படையில், எம்.ஏ. சுசீலா அவர்கள் மீட்டுருவாக்க கதைகளைப்படைத்து அதன் வழி பெண்ணியத்தை தெளிவாக்குகின்றார். இதனை, இராமன் சீதை கதை மட்டுமல்ல, பெரியபுராணத்திலிருந்து சங்கிலி மற்றும் கம்பராமயணம் இல்லாமல் உத்திரராமாயணத்திலிருந்து சமூகன் கதையையும், சிலப்பதிகாரத்திலிருந்து தேவந்தி, அதே போன்று ஆண்டாள் போன்ற கதைகளையும் மீட்டுருவாக்கம் செய்துள்ளார். இதற்கு காரணம் என்னவென்றால் மாணவர்களுக்கு இலக்கியத்தில் இலக்கிய வகுப்பு எடுக்கும் போது கூடவே மாற்றுச் சிந்தனைகளையும் வைக்கும் போது சில கேள்விகள் எனக்குள் எழும். தேவந்தியின் பாத்திரம் ஏன் இப்படி உள்ளது, என்பது போன்ற கேள்விகள், அதேபோல் பெரியபுராணத்தில் தடுத்தாற்கொண்டு புராணத்தில் அந்த மூன்று பெண்கள் அடுத்தடுத்து பாதிக்கப்படுகிறார்கள் என்பன போன்ற கேள்விகள் எழும். புதுமைப்பித்தன் போன்றோர் சீதையைப் பற்றி எழுதியுள்ளனர். நான் மாற்றுச் சிந்தனையை எடுத்து வைத்து ஏன் அந்த நிலை ஏற்பட்டுள்ளது என்கிற மாதிரி சில கேள்விகள் எழும். மரபு இலக்கியங்களை படித்திருப்பதினால் வகுப்பிலும் எடுப்பதினால் ஆழமான பயிற்சி இருக்கிறது. இன்றைக்குள்ள மாறின சமூக கண்ணோட்டத்ததால் மறுவாசிப்பு செய்வதற்குரிய களமாக வகுப்பறை எனக்கு ஒரு சிந்தனையை ஏற்படுத்தியது. அந்தச் சிந்தனைகளைத் தொடர்ந்து போய் இன்றைக்குள்ள கோணத்தில் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வந்தது. எனக்கு திருப்தியளித்த கதைகள் என்றால் மீட்டுருவாக்க கதைகள் தான். கோவை ஞானியும் ஒருமுறை என்னிடம் உங்கள் கதைகளில் எனக்கு மிகவும் பிடித்த கதைகள் மீட்டுருவாக்கக் கதைகள் என்று. உங்களின் துறையும் அதுதான் என்றார். தேவந்தி போன்ற கதைகளை இதுவரை யாரும் மீட்டுருவாக்கம் செய்ததில்லை. பாவண்ணன் அவர்கள் முன்னுரையில் கண்டுகொள்ளப்படாத பாத்திரம் தேவந்தி என்று எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில்

கடைசியில் தேவந்தி வருகிறாள். இதுப்போல் இலக்கியத்தில் நிறைய பயணம் செய்தாள் நிறைய மீட்டுருவாக்க கதைகளை உருவாக்க முடியும். பழைய பார்வையில் பழைய புராணங்களைப் பார்க்காமல் இன்றைக்குள்ள நிலையில் கதைகளை உருவாக்கலாம். இன்றைக்குள்ள மாணவர்கள் நிறைய கேள்விகள் கேட்கிறார்கள். எனவே வேறுமாதிரியான கோணத்தில் வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் மீட்டுருவாக்க கதைகளைக் கொடுக்கிறேன் என்று கதாசிரியர் நேர்காணலில் தெரிவித்துள்ள கருத்தைக் கொண்டு பெண்ணியத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே ஆய்வாளரின் கருத்தாகவும் அமைகின்றது.

தமிழ் இலக்கியத்தின் பெண்ணியத்தின் கருத்தாக்கத்தைப் பேசும்போது பெண்ணியத்தின் அடிப்படைக் கூறுகளை வரையறுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதைக் கொண்டு ஆராய்ந்துள்ள ஆய்வாளர் எம்.ஏ. சுசீலாவின் கருத்தான சமத்துவ பெண்ணியமே சிறந்தது என்னும் கருத்தை பதிவு செய்துள்ளார். மீட்டுருவாக்க கதைகளில் தேவந்தி கதையை மிகவும் சிறப்புடையதாக அமைத்துள்ளார் ஆசிரியர் எம்.ஏ. சுசீலா தன் கணவன் தன்னை விடுத்து கலையரசி மாதவியுடன் சென்றுவிட்ட சோகத்தில் ஏழடுக்கு மாட அந்தப்புரத்தில் பதுமையோடு பதுமையாக நின்றிருந்த அவளை அவள் தோழி தேவந்தி காணவந்து நீ இவ்வாறு இல்லத்திலேயே அடைபட்டுக் கிடக்காமல் என்னைப் போன்று ஆலயங்களுக்கு சென்று நிம்மதியைத் தேடு என்று அறிவுரைப் பகர்கிறாள். ஆனால், கண்ணகி அதனை ஏற்கவில்லை. தன் மீது தன் கணவனுக்கு உண்மையான அன்பு எப்பொழுது ஏற்படுகின்றதோ அதுவரை தான் காத்திருப்பதாக தேவந்தியிடம் கூறுகிறாள். சமூகத்தால் நிராசைக்கு உட்டுத்தப்பட்டு, நிலைகுலைந்து வஞ்சிக்கப்பட்ட எத்தனையோ பெண்களின் அவல நிலையை தேவந்தி கதை வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துகிறார். இச்சிறுகதையை உளவியல் அல்லது மனோதத்துவம் ஒன்றில் பார்க்கும்போது இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் இயல்பான வேலை. ஊக்கமின்மை, ஆளுமை, அவர்களின் நடத்தை போன்ற செயல்பாடுகள் அதிகமாக வெளிப்படக்கூடிய நிலை உள்ளது.

## தமிழ் இலக்கியத்தில் பெண்ணியத் திறனாய்வின் தாக்கம்

மேலை நாடுகளில் தோன்றிய பெண்ணியக் கருத்தாங்களின் பொருண்மை முழுவதும் தமிழ் இலக்கியத்தில் காண்பது அரிதாகலாம். எனினும் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு முன் பெண்களின் உண்மை நிலையைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் கண்டறிந்ததால் அவர்கள் சில அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு இடையறாத போராட்டத்தின் மூலம் அவற்றிற்குத் தீர்வு கண்டனர். தமிழ் இலக்கியத்தில் பெண்களின் நிலை குறித்த இந்த அடிப்படைப் பிரச்சினை பெண்ணியத் திறனாய்வின் தாக்கத்திற்கு வித்தாக அமைகிறது. எனவே சீர்திருத்தவாதிகள் தோற்றுவித்த இயக்கங்கள், பெண் விடுதலை குறித்த பார்வையைக் கூர்மையாக்க உதவுகின்றன எனக் கருதமுடிகிறது.

## பெண்மையைப் போற்றுதல்

பெண்ணின் மனநிலை, பண்பாடு, பெண்ணின் உற்பத்தி அனைத்தும் பெண்ணியத்தில் வருகின்றன. பெண்ணியலாளர்கள் தவிர அனைவரும் பெண்ணியத்தைப் போற்ற வேண்டும். எம்ஏ. சுசீலா அவர்களின் மீட்டுருவாக்க கதையான மானிடவர்க்கென்று பேச்சுப் படில் என்ற சிறுகதையில், தன் இல்லத்து துளசி மாடத்தின் அருகே கிடைக்கப் பெற்ற பெண்குழந்தைக்கு கோதை எனப் பெயரிட்டு, கண்ணனின் நாமத்தையேப் பாலுடன் புகட்டி, மிகுந்த பக்தியுடனும், பாசத்துடனும் வளர்க்கிறார் பெரியாழ்வார். உரிய பருவம் வந்ததும், செவிலித் தாய் பெரியாழ்வாரிடம் கோதையின் திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்தவே, அவரும் சடகோபரின் உதவியை நாடுகிறார். தன் தந்தையார் தனக்கு வரன் தேடுகிறார் என்பதை அறிந்த கோதை பாவை நோன்பு இயற்றி அந்த கண்ணனையே மணாளனாக வரவேண்டும் என்று தவம் இருக்கிறாள். சடகோபரிடம் ஊரார் கோதையின் பிறப்பு பற்றி விசாரிக்கின்றனர். எனவே, சடகோபர் ஊரார் விசாரித்த கோதையின் பிறப்பு பற்றி நம்மாழ்வாரிடம் கேட்கவே, மிகவும் மனம் உடைந்த பெரியாழ்வார் தெய்வமே மனிதர்களாகப் பிறந்தாலும் கூட இத்தகைய நிலைதானா? என்று எண்ணி அந்த அரங்கனைத் தவிர, தன் மகளுக்கு

யார் மணாளனாக வர இயலும் என எண்ணி சமாதானம் அடைகிறார். இதில் கோதை பாவை நோன்பு நோற்று கண்ணனை கணவனாக அடைய எண்ணுகிறாள். இதில் கோதை போற்றப்படுகிறாள். பெண்மையைப் போற்றுவதின் நிமித்தம் பெண்ணின் பிறப்பும், வளர்ப்பும் பற்றி அனைவருக்கும் சமூக அக்கறை அதிகளவில் உள்ளது.

## பெண்ணியச் சிந்தனைகள்

"இந்தியப் பெண்கள் பெருமைப்படுத்தபட வேண்டும், மனிதன் முழு மனிதனாவது பெண்மை போற்றப்படும் போதுதான் லைப் பார்ட்னர் என்றும் (Life partner) என்றும், தாய்க்குப்பின் தாரமென்றும் கூறியது சமைப்பதற்காக அல்ல". "பெண் விடுதலை பற்றிய பொறுப்புத்தான் மனிதர்களின் மேலோட்டமான தன்மையை மாற்றி அவர்களைச் சக்தி படைத்தவர்களாகச் செய்வதாகும். இந்தப் பொறுப்பை, நாம் பெண்களிடமிருந்து பறிமுதல் செய்தது தவறு" பெண்ணைச் 'சனியன் என்று ஆணுலகம் கூறினாலும் பெண்ணில்லாது உலகம் இல்லை. தமிழ்ப் பெண், பிறப்பு முதல் இறப்பு வரை பெற்றுள்ள தகுதியை இச்சமுதாயம் அவளுக்கு அளித்துள்ளது.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் என்று கவிமணி பாடினாலும், பெண்ணை விட ஆண்மகன் பிறப்பதையே சமூகம் அன்றும் இன்றும் ஏற்புடையதாக நினைக்கிறது.

பெண் அச்சம், அறியாமை காரணமாகத் துன்பப்படுவதை "இந்நாட்டு *அனாதை* பெண்கள் கூழுக்கு உப்பு வேண்டுமென்று கூக்குரலிடக் கூடிய தைரியம் இல்லாமல் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள்"[14] "பேதைமை என்பது மாதர்க்கு அணிகலன் என்ற முட்டாள் பழமொழிக்குச் சாதகமாகப் பெண்ணும் ஆணை நம்பி ஏமாந்து போகிறாள்" "அவதூறு, பழி கூறுவது என்பது இராமாயணப் பழமையானது. பெண்கள் இதற்கு மிக எளிதாக ஆட்படுகின்றனர். பெண்கள் தெருவிலே நடந்தால் அவர்கள் காது கேட்கும்படியாகவே அவதூறு பேசுவார்கள். பெண்களின் கர்ப்பத்தைப் பற்றி வம்பு பேசுபவர்கள், 'ஆண் கலப்பில்லாமல் பெண் கர்ப்பமாவதில்லை' என்பதை மறந்து பேசுவதில் எதுவும் அவர்களைப் பாதிப்பதில்லை".

பெண்கள் சமூகத் தொண்டு செய்தால் அவர்களின் நல்ல நோக்கத்தைத் தவறாக விமர்சிப்பதோடு, எளிதில் பட்டம் கட்டிவிடுவார்கள். பெண்ணின் இளமை, அழகு பலருடைய கண்களை உறுத்துவதாக அமைகின்றன. ஒரு பெண் பிற ஆடவருடன் பேசிப் பழகினால் அவள் மீது வீண்பழி சுமத்தி, அவளது மனநிம்மதியைக் குலைத்து, தற்கொலை செய்து கொள்ள வைக்கும் சமூகத்தை என்னவென்று சொல்லுவது. "பெண் புகுந்த வீட்டிலும் மாமியார், நாத்தனார் போன்ற அங்கத்தினரின் கொடுமைகளையும் ஏற்க வேண்டியுள்ளது" கணவனால் வீட்டைவிட்டு வெளியேற்றப்படும் அவலத்திற்கும் பெண்கள் ஆளாகின்றனர். இந்நிலை மாறவேண்டுமானால் பெண்ணை பெண்ணே முதலில் அங்கீகரித்து பெண்ணின் உணர்வுகளை, உணர்ச்சிகளை மதிக்கத்தக்க வகையில் தங்களை உருவாக்கிக் கொள்ளும் போது ஆணின் செயல்பாட்டில் மாற்றங்கள் உண்டாகும்.

## பெண்ணடிமை நிலைக்கான காரணங்கள்

"பெண்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளை இழந்ததாலேயே மேம்பாடு அடைய முடியவில்லை" "சொத்துரிமை, பதவி உயர்வு, கௌரவம் முதலிய பக்கபலங்களில்லாத அடிமைப் பெண்களின் மனத்தை ஆண் பிள்ளைகள் எளிதில் கலக்கிக் குழம்பச் செய்துவிடுகிறார்கள"

## பொருளாதாரத் துணையின்மை

பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும். பொருளாதார நிலையில் பெண் உரிமையற்றிருப்பது அவள் அடிமை நிலைக்கொரு காரணமாகும். படைப்பில் பெண் ஆணுக்கு உறுதுணையாக, உற்ற தோழியாகப் படைக்கப்பட்டதாகவே விவிலியம் கூறுகிறது. ஆனால், நடைமுறையில் உரிமை

மறுக்கப்படவே, இச்சமூகம் பெண்ணிற்கு அடிமை வாழ்வை, அவல வாழ்வைத் தருகிறது. எனவே இது போன்ற கருத்தாக்கங்களில் பொருளாதார ஆளுநர்களாக உருவாக முடியும்.

## திரு.வி.க. நோக்கில் பெண்ணியப் பார்வை

உலக மக்கள் தொகையில் செம்பாதி மகளிர். மகளிரது சமூக, பொருளாதார, அரசியல் நிலை உலகெங்கும் ஆடவரைக் காட்டிலும் தாழ்வாகவே உள்ளது. முன்னேற்றத்தின் உச்சத்தில் இருக்கும் அமெரிக்காவாக இருந்தாலும், பழமைக்குப் பழமையும், முன்னேற்றத்திற்கு முன்னேற்றமும் ஒருங்கே பெற்றிருக்கும் இங்கிலாந்தானாலும், புரட்சிக்குப் பெயர் பெற்ற சோவியத் நாடாக இருந்தாலும், மக்கள் தொகை பெருக்கத்திற்குப் பெயர்பெற்ற சீன தேசமாக இருந்தாலும், இஸ்லாமிய நாடாகிய ஈரானாக இருப்பினும், பெரிய ஜனநாயக சேதமாகிய இந்தியா என்றாலும் மகளிர் நிலை மட்டும் இவ்வெல்லா இடங்களிலும் இரண்டாமிடத்தாகவே இருந்தது. இருக்கின்றது. இருந்து வருகின்றது. இதை மாற்ற மேற்கொள்ளும் முயற்சிகளே பெண்ணியப் பிறப்பிற்கு வந்தாயின. ஆண்-பெண் இடையே பாலின அடிப்படையில் நிகழும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதே பெண்ணியத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது என்பதையும் நாம் உள்வாங்கிக்கொண்டால்தான் கதாசிரியரின் சமத்துவ பெண்ணியம் உருவாகும்.

## பெண்ணியப் பரிமாணங்கள்

பெண்ணியத்தை நில அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தலாம். ஆவை, மேற்கத்திய பெண்ணியம் (Western Feminism), ஆசிய பெண்ணியம் (Asian Feminism) ஆகும். மேற்கத்தியப் பெண்ணிய வகைகளாக, புரட்சிப் பெண்ணியம் (Radical Feminism), தாராளப் பெண்ணியம் (Liberal Feminism), மார்க்சீயப் பெண்ணியம் (Marxist Feminism), சமதருமப் பெண்ணியம் (Socialist Feminism), இராணுப் பெண்ணியம் (Militant Feminism) என வகைப்படுத்தியுள்ளனர். ஆசியப் பெண்ணிய வகைகளாக, இந்தியப் பெண்ணியம் (Indian Feminism), மதவாதப் பெண்ணியம் (Moderate Feminism), பழமைப் பெண்ணியம் (Conservative Feminism), கல்விச்சாலைப் பெண்ணியம் (Academic Feminism), குடும்ப அமைப்பிற்கெதிர் பெண்ணியம் (Anti-Family Feminism) என்று பெண்ணிய வகைகளைக் குறிப்பிட்டாலும், அவை நடைமுறைப் படுத்துவது என்பது விழிப்புணர்வின் மூலமே என்பதை அறிதல் வேண்டும்.

## வரைவு விளக்கம்

பெண்ணியம் சமூகப் பண்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்தவல்ல வலிமையான கருவி என்பதே ஆசியப் பெண்ணிய வரைவு விளக்கமாகும். தேசத்தின் மக்கள் தொகை முழுமையும் இவ்வகைப் பெண்ணியம் அரவணைத்துத் தழுவி நிற்கிறது. செயல்படத் தூண்டுகிறதே அல்லாது, ஏட்டளவில், எழுத்தளவில், கருத்தாக்கமாகவோ, கொள்கையாகவோ மட்டும் நின்று விடுவதில்லை. எனவே செயல்வடிவம் பெறும்போதே பெண்ணின் மகத்துவம் உணரப்பெறும்.

## பெண் அடிமைத்தனம்

"காண்பதற்கு ஒன்றுமில்லையெனில் விளக்கை அணைத்து விடலாம்" என்ற மௌனியின் கருத்தை இங்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம். பெண் என்பவள் விளக்கை போன்றவள். பெண் என்ற விளக்கு எரியவில்லையென்றால் உலகமே அணைந்துவிடும். பெண்ணிற்கு இந்த உலகில் காண்பதற்கு நிறைய நினைவுகள், பார்வைகள், இயற்கைகள் உள்ளன. ஆனால் எதுவுமே பார்க்க முடியாத அளவிற்கு பெண் என்பவள் பெலவீனமான பாண்டம் என்று பரிசுத்த வேதாகமமம் கூறுகிறது. ஆனால் அதே நேரத்தில் பெண் பலவீனமாக இருப்பாதால் பெண்ணை தாங்க வேண்டும், ஆதரிக்க வேண்டும், அனுசரித்து போக வேண்டும் என்று கூறுகிறது. இந்த கூற்றைப் பின்பற்றினாலே பெண் அடிமைத்தனம் முற்றிலும் ஒழிந்துவிடும். சமுதாயத்தில் பெண்கள் எவ்வளவுதான் முன்னேறினாலும் ஒரு பயம்

கலந்த உணர்வோது தான் வேலைகள் பார்க்கின்றனர். பெண்களுக்கு ஏற்படும் பயம், பலவீனமான மனம், ஒவ்வொரு நேரத்திலும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முயல்வது, இவ்வுலக வாழ்வில் உற்சாகமில்லாத தன்மை, இனம் புரியாத சோகம், எதையோ தேடி அலைவது, வேலைப்பளு, இளம் பிராயத்திலேயே தாய், தந்தையை இழப்பது போன்ற காரணங்களினால் பெண்கள் அடிமைப்பட்டு வாழ்கின்றனர்.

பெண் பற்றிய பிம்பத்தை அனைத்து ஆண்களும் தன் கண்முன்னே கொண்டு வரும்போது பெண்ணை தெய்வமாக உருவேற்படுத்தி காண வேண்டும். தவறான எண்ணத்தோடு பெண்ணை பார்க்கக்கூடாது. தன்னுடைய தாய், சகோதரியை ஒரு முறை நினைத்து ஒவ்வொரு பெண்ணையும் கண்ணோக்க வேண்டும்.

## பெண்ணடிமையின் ஆரம்பகால கட்டம்

பெண்களின் சமுதாய நிலையை உளவியல் நோக்கில் ஆராயும்பொழுது தொடக்கக் கால கட்டங்கள் - தாய்வழிச் சமுதாய அமைப்பில் மிக செழிப்பாகக் காணப்படுகின்றன.

“அக்கால கட்டத்தில் சமூகத்தில் குழு அமைப்பு| என்ற முறை இருந்து வந்திருக்கிறது. அக்காலத்தில் பிறப்பு விகிதம் அதிகமாகக் காணப்பட்டது. அதிகமாக குழந்தைகளைப் பெற்று குழுவினைப் பெருக்கினர் பெண்கள். குழுவில் தலைமையிடம் பெற்றிருந்தனர். இக்குழுவில் ஆணும் பெண்ணும் சேர்ந்தே பொருளாதார தேவைகளுக்காக ஒன்று சேர்ந்து வேலைக்குச் சென்று பொருள் தேடினர். அவர்களுக்குள் பால் வேறுபாடோ, ஏற்றத்தாழ்வுகளோ இல்லை. ஆண் - பெண் இருவருக்குமிடையே கட்டற்ற பாலுறவு அமைந்திருந்தது. இதனடிப்படையில் அக்காலத்தைக் காட்டுமிராண்டிக்காலம் என மார்க்கன் என்ற அமெரிக்க சமூகவியலாளர் பெயரிட்டுக் கூறுகிறார்”.

பெண் அடிமைத்தனத்திற்கு மற்றுமொரு காரணம் ஆண் எல்லாவற்றையும் நிர்வகிப்பவனாகவும், சொத்துரிமையுடையவனாகவும், பெண்ணிற்குரிய அனைத்து நிலைகளையும் ஆதிக்கம் செலுத்துபவனாகவும், உடல் உறவுகளை நிர்வகிப்பவனாகவும், பலமுறை திருமணம் செய்பவனாகவும் விளங்கினான். பெண்களுக்கு உண்டான அறிவுசார் வளர்ச்சி முடக்கிப் போடப்பட்டது. பெண்களைப் பற்றியதான பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. பெண் குழந்தைப் பேற்றுக்கே உரியவள் என முத்திரை குத்தப் பெறுகிறாள். குழந்தை பேறு அடையாத பெண் இன்றளவும் மலடி என்றே ஒதுக்கப்படுகிறாள். ஆனால் விவிலியம் மலடியான பெண்ணிற்கு ஆதரவாக சில கருத்துக்களை எடுத்துரைக்கிறது. “பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்து பாடு, கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாயப் பாடி ஆனந்த சத்தமிடு வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், *அனாதை*, ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம்” என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. இப்படியாக பெண்களுக்கு ஆதரவாக கடவுளே காணப்படுகின்றார் என்றால் ஆண்கள் எம்மாத்திரம். ஆண் பாலினம் பெண்களைப் பற்றி சற்று சிந்தித்து செயல்பட வேண்டும்.

சமூகம் ஆண் வசப்பட்டதால் பல தவறுகள் நடப்பதற்கு வழிகோலின. இந்த நிலையில் பெண்ணடிமைத் தனத்திற்கு “அவள் வாழ்ந்த காலம், இடம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமய, சமூகக் காரணங்கள் அடிப்படையாயின”.

பழங்காலந்தொட்டே இலக்கியங்களை எடுத்துப் பார்த்தோமென்றால் பெண்களைப் பற்றியதான கருத்துக்கள் இருப்பதை அறியமுடியும். தொல்காப்பியர், ஆணுக்கும் பெண்ணுக்குமான பண்புகளைத் தம் காலத்திய ஆணாதிக்கச் சூழலுக்கேற்ப வரையறுத்துள்ளார்.

சங்க இலக்கியங்களில் எடுத்தாளப்பெறும் அகம், புறம் என்ற பதிவுகள் பாலினப் பாகுபாட்டை எடுத்துக்கூறுகிறது. சங்க இலக்கியத்தை படித்துப் பார்க்கும்போது காதல் பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. காதல் என்ற வார்த்தை காணப்படினும் ஆண் முதன்மையாகவும், பெண் இரண்டாம் நிலையானவள் என்றே கருத்து மேலோங்கி காணப்படுகிறது. சமண, புத்த மதங்கள் இக்கால கட்டத்தில் அதிகமாக காணப்பட்டது. இதன் மூலமாகவும், பெண்களின் தரம் மேலும் நலிவுற்றது. பெண்களின் தரம் மேலும் கீழோங்கியது. இந்த நிலைமை முதற் காப்பியக் காலத்தில் காணப்பட்டது. அதன்பிறகு வந்த

காலகட்டத்தில் பெண்களுக்கும் பிறப்புரிமைகள் மறுக்கப்பட்டன. ஆண்களின் கைப்பாவையாக பெண்கள் மாற்றப்பட்டனர். வீட்டில் இருந்து கொண்டு வீட்டு வேலைகளை செய்வதிலும் ஆண்களுக்குத் தேவையான காரியங்களை செய்வதிலும், குழந்தை பெற்றெடுப்பதிலும், குழந்தைகளை வளர்ப்பதிலும் உற்றார் உறவினர்களுக்குத் தேவையான காரியங்களை கவனிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டனர். திணிக்கப்பட்டனர் என்றே சொல்லலாம். அதுமட்டுமில்லாமல் கணவரின் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டனர். இடைக்காலத்தில் அதிகமான பெண்கள் வேலைக்கு அனுப்பப்படவில்லை. குடும்ப சூழலில் சிக்கி பெண்கள் தவித்தனர். வறுமை, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, சீதனம், சாதி வேறுபாடு, மூடநம்பிக்கை மற்றும் பல இன்னல்களுக்கு ஆளாகினர் என்பதை சிற்றிலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

1969ல் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) பெண்ணடிமை நிலை (The subject of women) என்ற நூலில், சேர்ந்த சீமோன் தெபவார் (Simon de Beauvoir - 1980-1986) என்ற பெண் தத்துவ ஞானி, ~இரண்டாம் பால்' (The Second Sex - 1949) என்ற நூலில், முதன் முதலில் மரபியல் அடிப்படையில் அமைந்த பெண் மீதான அடக்குமுறையை ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து கேட்மில்லட் (Kate Millett- 1934) என்ற பெண்ணியக் கோட்பாட்டாளர், ~பாலியல் அரசியல்| (Sexual Politics - 1970) என்ற தமது ஆய்வு நூலில் பால் வேறுபாட்டின் அடிப்படையான பெண்ணடிமைத்தனத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் "உலகம் முழுவதும் பால்வகை| என்பது ஆண், பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது. ஏனெனில் ஆணாதிக்கச் சமூகம் வகுத்தது தான் பால்வகை என்பதாகும். ஆண் தனக்குரிய சமூகக்களனாக இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவள் இயக்கத்தைக் கட்டுப்படுத்தினான். அதனால் சமூகத்தில் அவள் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக் கிடக்கும் பெண் சமூகத்தை அணுக, அவளுக்குக் கணவன் என்ற துணை தேவைப்பட்டது. அச்சார்பு அவளை சுயசிந்தனை இல்லாதவளாக, ஆடவன் கைப்பாவையாக உருவாக்குவதற்குத் துணைபோயிற்று. பாலினங்கள் இடையிடையேயான அதிகார உறவுகள் வளர்ந்து பெருகக் குடும்பம் என்ற அமைப்பு காரணமாயிற்று"[22] என விவரிக்கின்றார்.

## பெண்ணுரிமைச் சிக்கல்களும் தீர்வுகளும்

பெண்ணுரிமையை, மேன்மையைத் தடைசெய்யும் கூறுகளை, செயல்பாடுகளை, நிகழ்வுகளைச் சிக்கல்களாகக் காணும்போது அதனை உணர்ந்து முடிவெடுக்கும் திறன் படைத்தவர்களாக பெண்கள் தங்களை வடிவமைத்துக் கொள்ளும்போது அந்த சிக்கல்களுக்கு தீர்வுகளையும் காணலாம்.

## சம உரிமை

காலத்திற்கேற்ப பல செயல்கள், எண்ணங்கள், மாறிய வண்ணம் உள்ளன. பெண்ணியமும் இதற்கு விலக்கல்ல. பெண்கள் ஆண்களோடு சரிசமானமாக வாழ்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். பெண்களும் தங்கள் பங்கையாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது.

ஆண்கள் மாற வேண்டியதன் கட்டாயத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டும் முறையில், "பெண்களைப் பற்றியும் ஆண் பிள்ளைகள் தங்கள் பரம்பரை மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். மாற்றம் இன்றியமையாதது. இயற்கையானது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். "பணபலம், உடல்பலம், அதிகார பலம், பரம்பரை பலம் கொண்ட ஆணுக்கு பலவீனப் பெண், புத்தி சொல்ல முடியுமா என்று பலர் கேட்கலாம். புத்தி சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதைப் பலரும் உணர வேண்டும்"[23] என்னும் கருத்தின் அடிப்படையை மனதில் கொண்டு செயலாற்ற வேண்டிய காலக்கட்டம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். அப்போது தான் சமஉரிமை பெறஇயலும்.

## முடிவுரை

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் குடும்ப அமைப்பு, பண்பு, திறன், முடிவெடுத்தல், தாய்மை, தாய் மகள் பாசப் பிணைப்பு போன்ற வாழ்வியல் கூறுகள் காணப்படுகின்றன. வாழ்வியல் கூறுகளை அடிப்படையாக கொண்டு ஒரு பெண் எவ்வாறு சமுதாயத்தில் வெற்றி பெறுகிறாள் என்பதே மிக முக்கியமாகும். ஒரு பெண் என்பவள் அனைத்து விதமான சூழ்நிலைகளையும், ஏற்றுக் கொண்டு மனதைப் பக்குவப்படுத்தி வாழ்க்கையில் வெற்றிப் பெறும் பொழுது மட்டுமே முதனிலை பெண்ணாகிறாள். இதற்கு அனுபவம், ஆர்வம், ஒழுக்கமுள்ள வாழ்க்கை முறை, மிகச்சிறந்த பண்பாடு, கலாச்சாரம், கடமையுணர்வு, பாசம், நேசம். கருணை, தூய்மை, அன்புறவு என்னும் வாழ்வியல் கூறுகள் அடிப்படைக் காரணங்களான அமைகின்றன. வாழ்க்கைக்கு ஏற்றம் தரும் வகையான கல்வியும், வளமான சிந்தனையையும், செயல்திறனையும் ஒரு பெண் தன்னுடைய குடும்பத்தில் நடைமுறைப் படுத்திவிட்டால் பெண்களும் தன்னம்பிக்கையோடு முன்னேற முடியும், வளமையான இளைஞர் சமுதாயத்தையும் அமைக்க முடியும். சமூகத்தில் பெண்களின் பங்கை அதிகப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஆளுமைத்திறனையும், பாதுகாப்பையும் மேம்படுத்த முடியும். ஆணை விட பெண்புத்திசாலி மட்டுமல்ல, திறம்பட்ட திறமைசாலி! ஒவ்வொரு செயலிலும் தென்படும் புத்திசாலித்தனம் பெண்களின் திறமையை வெளிப்படுத்தக்கூடியதாய் உள்ளது. பெண்கள் பல சமூகச் சிக்கல்களுக்கு உள்ளானாலும் அதையெல்லாம் தகர்த்து வரக்கூடிய திறமை உண்டு. கருவை சுமக்கும் பெண் வலிமையானவளாகவும், அன்புள்ளவளாகவும், பகிர்ந்தளிப்பளாகவும் காணப்படும்போது, இதைவிட ஆளுமைத்திறனுக்கு எடுத்துக்காட்டுகள் அதிகம் தேவையில்லை என்பதே உண்மையாகும். ஆளுமைத்திறன் அதிகம் இருப்பதினால் இக்காலத்தில் பெண்கள் மேம்பட்ட பல பதவிகளை வகித்துவருகின்றனர். அம்மா, மனைவி, தங்கை, பாட்டி போன்ற பதவிகளை ஒரே நேரத்தில் எடுக்கக்கூடியவர்கள் பெண்கள். இது போன்றே சமூகத்தில், அரசியலில், அரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்புகளில் பல பதவிகளில் ஆளுமையோடு செயல்பட்டு வெற்றி காணக்கூடியவள் பெண். எனவே பெண்மையைப்போற்றுவோம்.

## References

Kamali, T. (2005) Penniya Padaipalikiyam, International Institute of Tamil Studies, Chennai, India.

Manivannan, P. (2008) Tamil Kavithaigalil Penniyam, Nam Tamilar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License